அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

www.thirukalyanamatha.com



மலர் 5 இதழ் 1 ஜனவரி 2014

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர் உம்முடைய வழிகளெல்லாம் வளம் கொழிக்கின்றன. – திருப்பாடல்கள். 65:11

திருக்கல்யாண அன்னையின் அன்புப்பிள்ளைகளே புதிய வானமும், புதிய வையகமுமாக மலர்ந்திருக்கும் புத்தாண்டிலே புதிய இதயமும், புதிய ஆசியும் அணிந்தவர்களாய் அடியெடுத்து வைத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் இறையாசீரையும், திருவிழா வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் புதிய 2014 ஆம் ஆண்டை இறைவன் நமக்கு பரிசாக தந்துள்ளார். இந்தப் புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் அவருக்கு கொடுக்கும் பரிசு என்ன என்பதை சிந்திக்க வேண்டும். கடவுள் விரும்பாத குணங்களாகிய கோபம், ஆணவம், தற்பெருமை, கல்லான இதயம் போன்ற தீய குணங்களை நம்மிடம் இருந்து அகற்றி அமைதி, பொறுமை, தாழ்ச்சி, கனிவான இதயம் போன்ற நல்ல பண்புகளை இறைவனுக்கு பரிசாக கொடுப்போம்.

அன்னைமரியின் வழியில் விசுவாச ஆண்டில் பயணம் செய்து முடித்துள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த புத்தாண்டு முழுவதும் திருக்கல்யாணத்தாயின் பரிந்துரையால் உங்கள் இல்லங்களில் இன்பமும், சமாதானமும், மகிழ்ச்சியும், செழிப்பும் பெருகி வளமாக வாழ வாழ்த்துகிறேன். திருக்கல்யாண அன்னை தம் பிள்ளைகளின் மன்றாட்டுகள் அனைத்தையும் தம் மகனிடம் எடுத்துச் சொல்லி நமக்காக பரிந்துரை செய்து கொண்டே இருப்பதால் நமக்கு குறைவுகள் என்பது இல்லை.

பொற்பை நகரில் அமைந்துள்ள திருக்கல்யாண அன்னையின் திருத்தலம் நோக்கி வரும் ஒவ்வொரு குடும்பமும் எண்ணிலடங்கா ஆசிகளைப் பெற்று நன்றி நிறைந்த உள்ளங்களோடு இல்லம் செல்ல உங்களை வாழ்த்துகிறேன். விண்ணுலகமே பூமிக்கு இறங்கி வந்துவிட்டதோ என வியக்கும் வண்ணம் அலங்காரத்துடன் ஒளிமயமாக பவனி வரப்போகும் நம் திருக்கல்யாண அன்னையின் ஆசிபெற ஆவலுடன் வருகை தாருங்கள்.

2014 ஜனவரி 14ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23ஆம் தேதி காலை திருவிழா திருப்பலியும் 22,23ஆம் தேதி மாலை அன்னையின் அதிசய தேர்ப்பவனியோடு திருக்கல்யாண மாதா திருத்தலப் பெருவிழா நடைபெற இருக்கிறது. அதற்கு அன்னையின் மக்கள் அனைவரும் குடும்பம் குடும்பமாக வருகை தந்து அன்னையின் ஆசீரைப் பெற்றுச் செல்ல உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

# உலகத் திருச்சபை



**செபம் மற்றும் பிறரன்பு நடவடிக்கைகளுடன் கிறிஸ்து பிறப்பு விழாவுக் காகத் தயாரிப்போம்.**

– திருத்தந்தை பிரான்சிஸ்

கிறிஸ்து பிறப்பு விழா என்பது நாம் நினைப்பதைவிட மேலானது. ஏனெனில் இது கிறிஸ்துவை நோக்கிய பாதை. அவரைச் சந்திக்கச் செல்லும் பாதை. நம் முழு இருதயத்தோடும் , வாழ்வோடும் விசுவாசத்தோடும் இக்காலங்களில் இறைவனைச் சந்திப்போம் என எடுத்துரைத்த திருத்தந்தை நூற்றுவர் படைத்தலைவன் இயேசுவைச் சந்தித்து தன் விசுவாசத்தை வெளிப்படுத்திய நிகழ்வைச் சுட்டிக்காட்டி இத்தகைய விசுவாசத்துடன் நாமும் இறைவனைச் சந்திக்கும்போது முழுமையான மகிழ்வு நமக்கு கிடைக்கிறது என்றார். இறைவன் வரவுள்ளார் எனத் திருவருகைக் காலத்தில் கூறுவது அவர் நம் இதயத்தில் ஆன்மாவில் வாழ்வில் நம்பிக்கையில் பயணத்தில் மீண்டும் நுழைய வருகிறார் என்பதையே குறிப்பிடுகின்றது. கடவுள் நம் ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்து நம்மை உற்று நோக்குகிறார் என்பதை உணர்ந்து, அவர் நம்மை அன்புகூர்வதுபோல் நாமும் நம் இதயத்தை அவருக்கென திறந்து அன்புகூற வேண்டும் என்ற அழைப்பையும், கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக செபம் மற்றும் பிறரன்பு நடவடிக்கைகள் மூலம் நம்மைத் தயாரிப்போம் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

**போர் ஆயுதங்களைக் கைவிட்டு அவைகளை உழைப்பின் கருவிகளாக மாற்றுவோம்** – திருத்தந்தை பிரான்சிஸ்

போர் ஆயுதங்களைக் கைவிட்டு அவைகளை உழைப்பின் கருவிகளாக மாற்றும் காலத்திற்காக மாற்றும் காலத்திற்காக இறைவனை நோக்கி வேண்டுவோம் வாள்கள் கலப்பைக் கொழுக்களாகவும் ஈட்டின் அரிவாள்களாகவும் மாற்றப்படும். இனி போரோ போர்ப்பயிற்சியோ இருக்காது என்ற எசாயா இறைவாக்கினரின் வாரிசுகளை எடுத்தியம்பிய திருத்தந்தை பிரான்சிஸ். இத்தகைய ஒரு நாள் என்று இடம்பெறும் என்ற கேள்வியையும், தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களிடையே முன்வைத்தார். நம்பிக்கையின் விடியலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாம் நல்மேய்ப்பராம் இயேசுவோடு இணைந்து இறையரசின் நிறைவை நோக்கி வரலாற்றில் பயணம் செய்வோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்

**அர்ப்பணிக்கப்பட்ட துறவு வாழ்வு ஆண்டு 2015**

2015 ஆம் ஆண்டு அர்ப்பணிக்கப்பட்ட துறவு வாழ்வுக்கென அர்ப்பணிக்கப்படும் என ஆண் துறவு சபைகளின் 120 அதிபதிகளை வத்திக்கான் உலக ஆயர்கள் மாமன்ற அரங்கில் சந்தித்தபோது திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். உரோமையில் 82வது பொதுப்பேரவையை நடத்திய இந்த அதிபர்களுக்கு சிறிய உரையாற்றிய பின்னர் கேள்வி–பதில் போன்ற கலந்துரையாடல் நடத்திய திருத்தந்தை மறைமாவட்ட வாழ்வை துறவறச் சபைகள் எவ்வாறு வளப்படுத்த ஆயர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தன் அவசியத்தைப் பற்றி விளக்கினார்.

நன்றி. நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



01.12.13 அன்று சி. சவேரியார்புரத்தில் வைத்து திருத்தொண்டர் அற்புத சேவியர் மேதகு ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

2.12.13 சி. சவேரியார்புரம் புதிய ஆலய அர்ச்சிப்பு திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

3.12.13 டி. சவேரியார்புரத்தில் ஜுபிலி மற்றும் திடப்படுத்துதல் திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

6.12.13 அன்று தூத்துக்குடி திரு இருதயங்களின் பேராலயத்தில் வைத்து அருட்சகோ. மரிய பென்சிகர், அருட்சகோ.டேவிட் சகாய வளன் ஆகிய மூன்று பேரும் ஆயர் அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

7.12.13 அன்று தூத்துக்குடி யில் வைத்து திருமணம் ஆகி வெள்ளிவிழா மற்றும் பொன்விழா கொண்டாடும் தம்பதியர்களுக்கான திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

8.12.13 அன்று காலை தூத்துக்குடி திருஇருதயங்களின் பேராலயத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

9.12.13 முதல் 13.12.13 வரை மதுரையில் வைத்து மறைமாவட்ட குருக்களுக்கான தியானம் நடைபெற்றது.

14.12.13 அன்று காலை தூத்துக்குடி புனித மரியன்னை கல்லூரியில் திருப்பலியும் மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

15.12.13 அன்று வின்சென்ட் தே பவுல் சபை கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

18.12.13 அன்று மறைமாவட்ட கல்விக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

20.12.13 அன்று TMSSS நிர்வாகக்குழு கூட்டமும் மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்ல கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

21.12.13 அன்று மறைமாவட்ட கூட்டம் தூத்துக்குடி திருஇருதய மருத்துவமனையில் வைத்தும் மறைமாவட்ட மறைபரப்புபணிக்குழு கூட்டம் ஆயர் இல்லத்தில் வைத்தும், சிறுமலர் குருமட கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் குருமடத்தில் வைத்தும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

23.12.13 அன்று பல்வேறு பணித்தளங்களில் பணியாற்றுகின்ற அருட்சகோதரிகளுக்கு திருப்பலியும், கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

25.12.13 கிறிஸ்துமஸ் பெருவிழா திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

28.12.13 கல்லாமொழியில் வைத்து மீனவ பிரதிநிதிகளை மேதகு ஆயர் சந்தித்தார்கள்.

31.12.13 நள்ளிரவு புத்தாண்டு திருப்பலி மேதகு ஆயர் தலைமையல் நடைபெற்றது.

நன்றி–மறைமாவட்ட செய்திகள்



# பங்குசெய்திகள்

01.12.13 அன்று ஞாயிறு வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

04.12.13 ஆலய வளாகத்தில் உள்ள அமல உற்பவ அன்னை கெபியில் திருப்பலி நடைபெற்றது.

07.12.13 அன்று முதல் சனி நவநாள் வழிபாடுகள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

07.12.13 அன்று அமல அன்னை சபை திருவிழாவை முன்னிட்டு அமலோற்பவ மாதா சப்பரப் பவனியும் அதனைத்தொடர்ந்து நவநாள் திருப்பலியில் சபையின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். சபையின் புதிய பொறுப்பாளர்கள்: பங்குதந்தையால் நியமிக்கப்பட்டார்கள். அதில் புதிய தலைவியாக மேரி பிரின்சிலா, துணைத் தலைவியாக கிளாரெட்சுவேத்தா, செயலாளராக சித்ரா மற்றும் பொருளாளராக ஜூலியட் அனுஷா தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

08-12-13 அன்று அமலோற்பவ மாதா சபையின் திருவிழா திருப்பலி பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

08.12.13 அன்று திருவிழா சம்பந்தமான சிறப்பு ஊர்ப்பொதுக்கூட்டம் பங்குத் தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

10.12.13 அன்று புனித அந்தோனியார் கெபியில் மாலை திருப்பலி நடைபெற்றது.

11.12.13 அன்று 4 சாலை சந்திப்பில் அமைந்துள்ள மாதா கெபியில் மாலை திருப்பிலி நடைபெற்றது.

14-12-13 புனித தொன்போஸ்கோ இளைஞர் சபையினரின் திருவிழாவிற்காக நவநாள் ஆரம்பமாகிறது.

20-12-13 அன்று திருக்குடும்ப சபை திருவிழா நவநாள் ஆரம்பிக்கப்பட்டது.

21-12-13 புனித தொன்போஸ்கோ சபை திருவிழாவை முன்னிட்டு சப்பரப் பவனியும் அதனைத்தொடர்ந்து நவநாள் திருப்பலியும் நடைபெற்றது. சபையின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

22.12.13. அன்று புனித தொன்போஸ்கோ சபைத் திருவிழா திருப்பலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து புதிய பொறுப்பாளர்கள் பங்குத் தந்தையால் நியமிக்கப்பட்டார்கள். இதில் தலைவர் பதவிக்கு A.**சேசு இளையராஜா,** துணைத்தலைவராக **அமிர்தவளன்,** செயலாளராக P.**அந்தோணி பிரகாஷ்** துணை செயலாளராக S. ஜபன், பொருளாராக J.அந்தோணி பிரதீப்குமார், மற்றும் துணைப் பொருளாளராக M.அமல்ராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

22-12-13 அன்று நமது பங்கில் கடந்த ஓராண்டாக பணியாற்றிய திருத்தொண்டர்

. டேவிட் வளன்அவர்களுக்கு நமது பங்குதந்தை தலைமையில் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. நமது ஊர் பொது மக்கள் பெருவாரியாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்

24-12-13 அன்று நள்ளிரவு கிறிஸ்மஸ் பெருவிழா திருப்பலி மிகச்சிறப்பாக நடைபெற்றது. பங்குத்தந்தையும், பங்குமக்களும் கிறிஸ்மஸ் வாழ்த்தை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்கள். கோயில் வளாகத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் அனைவரும் வியக்கும் வண்ணம் கிறிஸ்துமஸ் குடில் அமைக்கப்பட்டது. கோயில் உள்ளேயும் பாரம்பரிய முறையில் குடில் அமைக்கப்பட்டிருந்தது.

25-12-13 அன்று மாலை ஆராதனை முடிந்தவுடன் கோயில் மண்டபத்தில் வைத்து டொன்போஸ்கோ சபையினரால் கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கிறிஸ்துமஸ் கனி பரிசுகளாக முதற்பரிசு வாஷிங்மெஷின், இரண்டாம் பரிசு கிரைண்டர், மூன்றாம் பரிசு சார்ஜர் பேன் மேலும் சில்வர் குடம், சில்வர் குத்துபோனிகள், வாளிகள் என மொத்தம் 1300 பரிசுகள் வழங்கப்பட்டன.
கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு குடில் போட்டிகள் நடைபெற்றது. குடில் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு நமது ஊர் புனித டொன்போஸ்கோ இளைஞர்கள் கேரல்சர்விஸ் நடத்தி மக்களை மகிழ்வித்தார்கள்.
பல்வேறு பரிசுகளை பெற்று மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள், அனைத்து ஏற்பாடுகளையும் பங்குதந்தை தலைமையில் நமது ஊர் டொன்போஸ்கோ இளைஞர் சபையினர் மிகச்சிறப்பாக செய்தார்கள்.

28-12-13 அன்று திருக்குடும்ப சபையார் திருவிழாவை முன்னிட்டு சப்பரப்பவனி நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற நவநாள் திருப்பலியில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

29-12-13 அன்று பரிசுத்த திருக்குடும்ப சபைத்திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

31-12-13 அன்று நள்ளிரவில் புத்தாண்டு திருப்பலி சிறப்பாக நடைபெற்றது. பங்குதந்தையும், பங்குமக்களும் உறவின் புத்தாண்டு வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

நமது ஊர் 10-ம் திருவிழா அன்று காலை 7.00 மணி திருப்பலியில் உறுதிப்பூசுதல் மற்றும் புது நன்மை வழங்கப்படும். இந்த அருட்சாதனங்களை பெற விரும்புவோர் அருட்சகோதரியிடம் பெயர்களை பதிவு செய்யவும். ஜனவரி முதல் வாரத்திலிருந்து இவர்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடத்தப்படும். வெளியூரில் இருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் இருக்கின்ற ஊரிலேயே மறைக்கல்வி பயின்று அந்தந்த பங்கு தந்தையிடமிருந்து கடிதம் கொண்டு வரவும்.

திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக அசன மண்டபத்தின் இரண்டாவது மாடியில் குளியறை மற்றும் கழிப்பிட வசதிகள் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பங்குத்தந்தை**

# 2014-ம் வருட திருக்கல்யாண அன்னையின் திருத்தல 101வது ஆண்டு தேரோட்ட பெருவிழா சிறப்பு ஊர் பொதுக்கூட்டம்

08.12.2013 அன்று காலை 10.30 மணிக்கு பங்குதந்தை அருட்திரு. பபியான் ஜோசப் அடிகளார் தலைமையில் ஊர்ப்பபொதுக்கூட்டம் ஆரம்பமானது.

## 14.01.2013 திருத்தல பெருவிழா கொடியேற்றம்

**தீர்மானங்கள்:**

**வரிபோடுதல் :** திருவிழா வரி ரூ 1250/- (ஆயிரத்துஇருநூற்று ஐம்பது மட்டும்)

***திருவிழா பணிக்குழுக்கள்***

***வரிபிரிக்கும் குழு***

**வடக்குத்தெரு**
திரு.லாரன்**ஸ்** தலைமையில் குழு

**தெற்கு தெரு**
திரு.**ஜேம்ஸ்** தலைமையில் குழு

**தேர்க்குழு & கொடிமர குழு**

**பணிகள்**
கொடியேற்றம்
தேர்ப்பவனி, மைக்
தேர் அலங்காரம்
வாணவேடிக்கை
நற்கருணை பவனி

1.திரு.**பிரான்சிஸ் தேவராஜ்** (தலைவர்)
2.திரு.**அந்தோணி ஜெயராஜ்**
3. திரு.**அந்தோணி ஜெயராஜ்**
4.திரு.**பிரபு**
5. திரு.**அமல்ராஜ்**
6. திரு. **ஜெயசிங்**

**உணவுக்குழு**

**பணிகள்**
மேளகாரர் சாப்பாடு
திருவிழா விருந்து
திருவிழா கேண்டீன்

1.திரு.**காமராஜ்** (தலைவர்) 2.திரு.**ஜார்ஜ்**
3.திரு.**ஜேம்ஸ்** 4.திரு.**சேவியர்**
5. திரு.**டொமினிக் ராஜன்**
6.திரு.**இருதயராஜ்** 7.திரு.**ஜெயசீலன்**
8.திரு.**எட்வர்ட் லாரன்ஸ்** 9.திரு.**ரவீஸ்டர்**
10 .திரு. **அருள்செல்வன்**

**டீசல் குழு**

**பணிகள்** 1.திரு.**சேவியர்** (தலைவர்) 2.திரு.**காமராஜ்**
ஒலி,ஒளி டீசல் வாங்குதல் 3.திரு.**அமலதாசன்** 4.திரு.**அருள்** 5.திரு.**குமார்**

**போலீஸ் – எலெக்ட்ரிக்–டெலிபோன் குழு**

1.திரு.S.M.A.**ஜார்ஜ்** (தலைவர்) 2.திரு.**சந்தனதிரவியம்**

## அமைதிக்குழு

ஆலய நிகழ்வுகள் கலைநிகழ்ச்சிகளில் மக்கள் அமைதிகாக்க செயல்படுபவர்கள்

1.திரு. **பாபு** தலைமையில் டொன்போஸ்கோ இளைஞர்கள் செயல்படுவார்கள்.

## அமைதிக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.**செல்வராஜ்** |
| துணை தலைவர் | : | திரு.**அந்தோணி ராசையா** |
| செயலர் | : | திரு.**இருதயராஜ்** |
| பொருளர் | : | திரு.**ராஜேந்திரன்** |
| துணை செயலர் | : | திரு.**சூசை செசன்ராஜ்** |
| ஒருங்கிணைப்பாளர் | : | திரு.**அமல்ராஜ்** |

## வாகனம் ஒழுங்குபடுத்துதல் குழு

மேல்நிலைப்பள்ளி வளாகம் மற்றும் ஆலய வளாகத்தில் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல்

1.திரு.**காமராஜ்**
2.திரு.**பீற்றர்**

## வழிபாட்டுக்குழு

அருட்சகோதரி **மைக்கிள்** (தலைமை) **அந்தோணி ஜெயராஜ், பிரான்சிஸ் தேவராஜ், லடிஸ்லாஸ் ராஜன்** இவர்களுடன்இணைந்து திருக்குடும்ப சபை மற்றும் மாதா சபையினர் செயல்படுவார்கள்.

## பங்கு அலுவலகப் பணிகள் மற்றும் முதலுதவி

1.திரு.**ஜெயசீலன்** ஆசிரியர் (தலைவர்)
2.திரு.**ததேயுஸ்** ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் மாணவிகள் இணைந்து செயல்பட வேண்டும்

## கடைகள் ஒழுங்குபடுத்தும் குழு

1.திரு.**சூசை செசன்ராஜ்** (தலைவர்)
2.திரு.**அருள்**
3.திரு.**அமல்ராஜ்**
4.திரு.**ஜெயசிங்**
5.திரு.**ஜோசப்ராஜ்**

**குறிப்பு:-**

முதல் சனி கடைகள் 30 மணி நேரத்திற்குள் இடத்தை காலி செய்ய வேண்டும்.

திருவிழா கடைகள் ஜனவரி 14 முதல் ஜனவரி 27வரை மட்டுமே செயல்பட வேண்டும் அதற்குப்பின் செயல்படும் கடைகளுக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

வளையல் கடைகள் மெயின் ரோட்டில் இருந்து செபஸ்தியார் நாடக வளைவு கேட்வரை வைக்கவேண்டும்.

மிட்டாய் கடை, ஓட்டல் மற்றும் அடுப்பு பற்றவைக்கும் அனைத்து கடைகளும் பள்ளி வளாகத்தினுள் வைக்கவேண்டும்.

மிட்டாய்கடை அதிகம் யார் கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு முதல் கடையும், ரேட்டின் அடிப்படையில் அடுத்த கடைகள் வழங்கப்படும். மிட்டாய் கடைகளில் விலை விபரங்கள் முடிவு செய்யப்பட்டு போர்டு கோயில் சார்பாக வைக்கப்படும்.

வழிபாடு முடிந்தவுடன் வானவேடிக்கையும் அதைத் தொடர்ந்து ஏலமும் நடைபெறும்.

ஒலி, ஒளி அமைக்க மூன்று நபர்கள் கொட்டேசன் கொடுத்துள்ளார்கள். 1. சவுண்ட்ஸ், நெல்லை = ரூ.3,99,999/- மணி சவுண்ட்ஸ், கன்னியாகுமரி = 4,60,000/- திருக்கல்யாணி சவுண்ட்ஸ், பொற்பை ரூ.3,99,099/- கொட்டேசன் அடிப்படையில் குறைவாக கொடுத்த திருக்கல்யாணி சவுண்ட்ஸ் உரிமையாளர் திரு. அந்தோணி பாஸ்கருக்கு வழங்கப்பட்டது.

ஒலி ஒளி கண்காணிப்புக் குழு

திரு. ஜெயராஜ்

திரு. இருதயராஜ்

திரு. ஜேம்ஸ்

திரு. சூசை செசன்ராஜ்

திரு. அமல்ராஜ்

ஜனவரி 27-ம் தேதிக்குள் ரூ.2,00,000/- வழங்கப்படும். அதன் பின்னர் ஒலி, ஒளி கண்காணிப்புக் குழு கொடுக்கும் முடிவின் அடிப்படையில் மீதித் தொகை வழங்கப்படும்.

24.01.2014 அன்று நடைபெறும் சிறப்பு ஊர்க்கூட்டத்தில் பெண்களையும் வரவழைத்து கோயிலில் கூரை போடுதல், சிலுவைப்பாதை ஸ்தலம் சம்பந்தமாக பேசிமுடிவு எடுக்கப்படும்.

கலை நிகழ்ச்சிகள் தனியாக ஏற்பாடு செய்வோர் பங்குத் தந்தையை தொடர்பு கொள்ளவும்.

பள்ளிக்கூட வளாகத்தின் வடபுறம் பொருட்காட்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. திரு. காமராஜ், திரு ஜார்ஜ் ஆகியோர் இதன் பொறுப்பாளர்களாக செயல்படுவார்.

முதல்சனிக்கு அடுத்த ஞாயிறு இரண்டு திருப்பலிகள் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் அடக்கத்திருப்பலி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

தினமும் மதியம் 12.00 மணிக்கு ஆலயத்தில் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை நற்கருணை ஆசீர் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

8,9,10ம் திருவிழா நாட்களில் திரு. ஜெயசீலன் ஆசிரியர், திரு ததேயுஸ் ஆசிரியர் ஆகியோர் கோயில் வளாகத்தினுள் அறிவிப்பாளராக செயல்படுவார்கள்.

தேரை வழிநடத்தும் அறிவிப்பாளராக திரு. கமிலஸ், திரு. ஜெயராஜ் செயல்படுவார்கள்.

**-பங்குத் தந்தை &பங்குமக்கள்**

# மகாப் புத்தி உடைத்தான கன்னிகையே...




புண்ணியங்களில் ஒன்று புத்திக்கூர்மை. அவையாவன: நீதி, மனவலிமை, தன்னடக்கம், புத்திக்கூர்மை அல்லது முன்யோசனை அல்லது விவேகம். இது ஏன் முக்கியமாக கருதப்படுகிறது. என்றால் இந்தப் புண்ணியம் மற்ற புண்ணியங்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு சாதனமாக இருக்கிறது. வாசகர்களின் சொல் அகராதி நிலைப்பாடு, நடைமுறை ஞானம் என்பனவற்றின் தன்மை, தரம் என புத்திக்கு வரையறை கொடுக்கிறது. இந்தப் புத்திக்கூர்மையை அரிகா வெர்த்தும் விளக்குகிறது. அதன் பொருள் புண்ணியங்களின் ஓட்டுனர் என்பது ஆகும்.

விவிலியத்தில்

புத்திதான் நம்முடைய செயல்களைத் தீர்மானிக்கிறது. வழிநடத்துகிறது. குறிப்பாக நிறைய வாய்ப்புகள் இருக்குமிடத்தில் நம் புத்திதான் எது தேவை, எது தேவையில்லை எனத் தீர்மானிக்கிறது. புத்திக்குறைவு அழிவு. அதே சமயத்தில் புத்தி நம் வசம் இருக்கும்போது நாம் பேறு பெற்றவர்கள் மற்றும் பாக்கியம் பெற்றவர்கள் ஆகிறோம். எடுத்துக்காட்டாக, யாக்கோபிடம் ஏசா தன்னுடைய பிறப்புரிமையை விற்றது. (தொ. நூ. 25:29) அதோடு மட்டுமல்லாமல் யாக்கோபு 12 குலங்களில் தகப்பனிடத்தில் ஆசிபெறச் சென்றார். ஏசா ஆசியே பெறாமல் போனார் தன்னுடைய புத்திக்கூர்மையின்மையால். மேலும் தாவீது – கோலியாத்து. இவன் தன்னுடைய புத்திக்கூர்மைக் குறைபாட்டால் தாவீதின் செயலைக் குறைத்து எடைபோட்டான். கடைசியில் எழுமுடியாமல் வீழலானான். தாவீது அரசன் (2சாமு. 2:14) சாமோனின் செபம் – ஞானத்திற்கு வேண்டல். எப்படியிருப்பினும் அதாவது மேற்சொல்லப்பட்டது போல மனிதர்கள் இருந்தாலும் மகாப்புத்தி உடைத்தான கன்னிகையே என யாருக்கும் பெயர் வழங்கப்படவில்லை. யாருமே அன்னையைப் போல தெரிவு செய்வதில் சிறந்து விளங்க முடியாது என்பதற்கு இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு ஓர் உதாரணம் எனலாம். அவர் சக்கரியாவைப்போல அல்லாமல் லூக்கா1:38ல் வாசிப்பது போல உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும் எனத் தெளிந்த மனதோடு தன் வாழ்வைத் தெரிவு செய்தவர். மரியின் பங்கு இயேசுவின் பணியில் தெளிவாக படம்பிடித்துக் காட்டப்படுகிறது. இதனால் அவருடைய புத்தி எண்பிக்கப் படுகிறதென்றால் அது ஒரு போதும் மிகையல்ல. இயேசுவை மரியா பெற்றெடுத்து வளர்த்தாலும் கூட தனக்கு மட்டுமே இயேசு சொந்தம் என ஒருபோதும் உரிமை பாராட்டி நிற்கவில்லை. மாறாக தந்தையாம் கடவுள் ஒப்புவித்த பணியைச் செய்ய அவர் இயேசுவைத் தாரை வார்க்க வேண்டியிருப்பதை உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் உயர்ந்து நிற்கிறார்.

**– தாயே எங்கள் தஞ்சமே.**

# உப்பு மாரி

மாரி என்ற அழகு தமிழ்ச் சொல் மழையைக் குறிக்கும். மாந்தர் அனைவருமே மழையில் நனைய குளிக்க விரும்புவர். ஆனால் உப்பு மழையில் குளித்திருக்கிறீர்களா– உப்பு மழையா வியப்பாயிருக்கிறதா–

அருள்தரும் இமயம் திருக்கல்யாணத்தாய் கோயில் கொண்டிருக்கும் பொற்பை மாநகருக்கு ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் 22, 23 தேதிகளில் வந்தால் உப்பு மழையில் குளிக்கலாம். அன்றைய நாட்களில் திருக்கல்யாணத்தாய் வானுயர் தங்கநிற தேரினிலே சிங்கரமாய் சிரிப்புடன் கொலுவிருந்து ஊர்வலம் வருவாள். அக்காட்சியினை அகங்குளிரக் கண்டு அன்னையின் அருளாசீரைப் பெற, அகிலமெங்குமிருந்தும் மக்கள் அலைகடலென ஆர்ப்பரித்து வருவர். அவ்வமயம் ஆங்காங்கே முக்கியமான இடங்களில் தேர் நிற்கும்

மக்கள் குடும்பம் குடும்பமாய் ஒருங்கிணைந்து ஒய்யாரமாய் வீற்றிருக்கும் அன்னையை நோக்கி உப்பினை அள்ளி வீசுவர். மக்கள் வீசும் உப்பானது அன்னையின் திருவழியை தொட்டு அருள்மழையாக மக்கள் மேலேயே பொழியும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. மழைநீர் தேங்கி நிற்பதுபோல் தெருக்களில் உப்பானது குன்றென குவிந்துகிடக்கும்.


இந்த உப்பு சொரியும் நிகழ்ச்சியின் மூலம் பலவித பண்புகளை நாம் உணர்ந்து கொள்ளாமல் ஒரே பெட்டியிலிருந்து உப்பினை அள்ளி வீசுவதால் குடும்பங்களிடையே ஒற்றுமை வளர்கிறது.

உள்ளூர் மக்கள் மட்டுமின்றி வெளியூர் மக்களும் பல்சமய மக்களும் அன்னைக்கு உப்பினை காணிக்கையாக்குவதன் மூலம் சமய சமரச மனப்பான்மை வளர்கிறது. அம்மட்டுமா– பல்வேறு நோய்கள் நீங்குகின்றன. பலபல விண்ணப்பங்களை உள்ளத்து உணர்வுகளை நன்றிகளை உப்பு வீசுவதன் மூலம் மக்கள் அன்னையிடம் சமர்ப்பிக்கின்றனர் வீசும் உப்பு அன்னையின் சமர்ப்பிக்கின்றனர். வீசும் உப்பு அன்னையின் திருவடியைத் தொட்டு மக்கள் மீண்டும் வீழ்வதன் மூலம் திருக்கல்யாணத்தாயின் அருளாசீர் மக்களுக்கு நிரம்பக் கிடைக்கிறது. மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.

திருக்கல்யாணத்தாய் தெய்வீக ஒளியுடன் தரிசனம் கொடுக்கும் காட்சியினைக் காண ஜனவரித் திங்கள் 22,23தேதிகளில் வாருங்கள் பொற்பைக்கு வந்து உப்பு மழையில் நனைந்து அன்னையின் அளவிலா அருளாசீரைப் பெற்றுச் செல்லுங்கள்.

–நல்லாசிரியை **G.ரெஜினாள் மேரி**
பொற்பை.

## வரம் தருவாய் அன்னையே....!



மறை புகழ் அன்னையே
மடி ஏந்தி நிற்கையில்
மன மகிழ் தாயே
மக்களின் மாண்பு எழவே

மன்னவனின் தாயே
மகிழ்ச்சியின் தாயே
பொற்கரம் நீட்டி
பொற்றாமரையாய் மலர்வாய்

ஏழு கண்ட மக்களின்
ஏற்றத்தைக் கண்ணால்கண்டு
ஏற்புடன் வாழ
என்றும் வரம் தருவாய் அன்னையே

**ஜார்லின் பெமிலா வில்சன்**
கவரப்பேட்டை

# நெஞ்செல்லாம் நிறைந்திருக்கும் திருக்கல்யாணத் தாய்!

நெஞ்செல்லாம் நிறைந்திடும் திருக்கல்யாணத் தாயே!
தேவமகன் எமக்களித்த தெய்வீக திருக்கொடையே!
உம்மை பிள்ளைக்குரிய வாஞ்சையோடு அம்மா என்றழைத்து
அன்பைப் பொழிய ஆவலாய் வந்தோம் அம்மா!
உந்தன் திருமண ஊர்கோலம் காண அடியோர்கள்
பொற்பை நகர் நாடி விரைந்தோடி வந்தோம் அம்மா!
தென் தமிழகத்தின் வேளை நகர் பொற்பையில்
நின் மாட்சிவிளங்க வல்லமை மிகு இறைமகனை
நின் திருக்கரமேந்தி வீற்றிருக்கும் கல்யாணத்தாயே!
நின் பொற்பாதம் பணிய பறந்தோடி வந்தோம் அம்மா!
கானாவூர் கல்யாண வீட்டில் கனி ரசம் தந்து
கன்னியர் குறை தீர்த்து சுப வாழ்வளித்து
குலம் தழைக்க சுமங்களிகள் மடி நிரப்பி
கணக்கிலடங்கா அற்புதம் புரியும் கல்யாணத் தாயே!
எங்கள் குடும்ப நலமே நின் மகிழ்வென எண்ணி
எம்மை முப்பொழுதும் காத்திடும் திருமகளே!
விண்ணக பேரரசி நீ அருள் தரும் இமயமாய்
மண்ணில் சிங்காரத் தேரில் பவனி வரும்போது
நெஞ்செல்லாம் நிறைந்திடும் திருக்கல்யாணத் தாயே!
உம் பாதம் பணிந்து உம் சித்தம் ஏற்றோம் அம்மா!
தேடி வந்து சொந்தம் கொண்டாடும் நின் மக்களின்
நம்பிக்கையுடன் கூடிய வேண்டுதல் ஏற்று
தீதினின்று காத்து நின்று வழிநடத்த வேண்டும் அம்மா!
அருளோடு பொருளும் பெற்று நிறை வாழ்வை அடைய
நின் நல் ஆசி தரவேண்டும் அம்மா!



M.மிக்கேல்உஷா , பொற்பை

## ஹெல்த் டிப்ஸ்... ஹெல்த் டிப்ஸ்... ஹெல்த் டிப்ஸ்...

**மந்தம் வயிற்றுப் பொருமல்**

பெருங்காயத்தை நீரில் கரைத்து ஒரு சங்களவு எடுத்து சிறிது ஓமத்தை சேர்த்துக் கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் மந்தம் வயிற்றுப்பொருமல் போகும்.

**இழுப்பு நோய் :**

மிளகையும் எருக்கம்பூக்களையும் சம எடை எடுத்து நன்றாக அரைத்து பனைவெல்லம் கூட்டி சிறு குளிகை செய்து சாப்பிட்டால் இழுப்பு நோய் குணமாகும்.

# மரியன்னை



மரியன்னை திருத்துவத்தின் தூய வெண்மையான லீலிமலர். அவள் ஆண்டவரிடத்தில் அடிமையாயிருப்பதால் திரியேகக் கடவுளுக்குப் பணி செய்து வருகிறாள். மரியன்னை இறைவார்த்தையானவரின் தாய் என்பதும் அவளது திருவயிற்றில் இறைமகன் உருவெடுத்தார் என்பதும் படைப்பில் ஓர் அதிசயமான செயலாகும்.

கடவுளின் அன்னையாவதற்கு மரியன்னை மாசு மருவற்று பாவம் இல்லாது தூயவளாக இருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அவள் புதிய ஏவாளாக விளங்கவேண்டுமென்று முன்குறிக்கப் பட்டிருந்தாள்.

இயேசுவோடு அவள் கொண்டிருக்கும் அன்பு என்றும் தனித்தன்மை வாய்ந்தது. மனித மீட்பு கிறிஸ்துவால் மாத்திரம் தான் கிடைக்க கூடியது. கிறிஸ்து தம் தாய் மீது கொண்டிருக்கும் உறுதியான அன்பினால் தான் அவளுடைய காட்சிகள் நிகழ வேண்டுமென அனுமதித்திருக்கிறார். அக்காட்சிகள் கடவுளின் விருப்பமின்றி நிகழ முடியாது படைப்பின் போதும் பெந்தகோஸ்து நாளிலும் மரியன்னை மீது எழுந்து வந்த தூய ஆவி பெண்களுக்குள் பேறு பெற்ற மரியன்னை மூலம் நம்மோடு பேசுகிறார்.

நாம் அனைவரும் கடவுளிடம் திரும்பி வந்து அவரோடு ஒப்புரவாகி அவரது திருவுளத்தோடு இணைய வேண்டுமென அவர் பெரிதும் விரும்புகிறார். இறைவாக்கினர் மற்றும் புனிதர்கள் மூலம் தரப்பட்ட இறைவாக்குகள் இக்காலங்களில் நிறைவேறுவதை நாம் உணர வேண்டும். எனவே நீங்கள் எங்கிருந்தாலும் மரியன்னையின் குரலுக்கு செவிமடுங்கள். நம் தாயின் அன்புக்குப் பதில் அன்பு செலுத்துங்கள். அந்த அன்பு மனிதரால் ஏற்படுத்தப்பட்ட எல்லைகளையும் பிரிவினைகளையும் தாண்டி மேலோங்கி நிற்கிறது. எனவே அந்த அன்னையை ஏற்றுக்கொள்ளுங்கள். இறைவனிடம் திரும்பிவாருங்கள்.

**D.ஜோஸ்பின் மேரி தாசன்**, கவரப்பேட்டை

---

**வாழ்த்துகிறோம்**


| | | |
|---|---|---|
| 15.11.2013 | T.ஜெயவீரன்<br>R.மெக்லின் | பொத்தக்காலன்விளை |
| 06.12.2013 | S.மரிய கார்னேசன்<br>I.எழில் அரசி | பொத்தக்காலன்விளை |

---

**வரவேற்கிறோம்**

இறைஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை
அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்

| | | |
|---|---|---|
| A.அந்தோணி யமுனா | பொத்தக்காலன்விளை | 30.05.2004 |
| M. கனக சிந்து | பொத்தக்காலன்விளை | 23.10.1983 |



# கல்யாணத்தாயின் முக்கியத்துவம்

லூக். 1-28 அருள் நிறைந்த மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே என இறைவன் தமக்குக் கொடுத்தனுப்பிய இறை வார்த்தைகளைச் சுமந்து வந்த இறைவனின் போஸ்ட்மேன் காபிரியேல் வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அவரை இறைவார்த்தைகளால் வாழ்த்துகின்றார்.

இருள் சூழ்ந்த உலகில் அருள் நிறைந்த மரியே நீ என்றென்றும் வாழ்க! அதாவது உமக்கு வீழ்ச்சி என்பதே கிடையாது ஏனெனில் ஆண்டவர் எப்போதும் உம்மோடிருக்கிறார் என்றார் வானதூதர். அதாவது நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் உம்மோடிருப்பதால் நீ என்றென்றும் அருள் மிக பெற்றவள் என்கிறார் ஆண்டவர்.

இறை திட்டத்திற்கு, மீட்புத் திட்டத்திற்கு தன் ஒரே மகனையே உலகிற்கு அனுப்ப என்றும் கன்னியான மரியாவைத் தேர்ந்தெடுத்து முக்கியத்துவம் கொடுத்தார் இறைவன். லூக். 1:42 பெண்களுக்குள் பேறு பெற்றவள் நீரே உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே என ஆண்டவரின் தாயாக நம் மீட்பரின் தாயாக முக்கியத்துவம் பெற்றவரானார். லூக். 1:35 வானதூதர் அவரிடம் தூய ஆவி உம் மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும் என்று உரைக்கிறார். இப்படியாக தூய ஆவியின் அபிசேகம் பெற்று முக்கியத்துவம் பெறுகிறார். இப்படியாக மூவொரு இறைவனின் சங்கமமாக முக்கியத்துவம் பெற்று திகழ்கிறாள் நம் திருக்கல்யாணத்தாய். பிதாவின் அன்பு மகளாக, இயேசுவின் தாயாக, தூய ஆவியின் பத்தினியாக இப்படியாக மூவொரு மரியாளைப் புகழும் போது அப்புகழ்ச்சிக்குக் காரண கர்த்தாவாகிய இயேசுவைப் புகழ்கின்றோம். தூய ஆவியைப் புகழ்கின்றோம். தூய ஆவியைப் புகழ்கின்றோம். கடவுளைப் புகழ்கின்றோம்.

இப்படியாக இறைவனோடு செய்துகொண்ட உடன்படிக்கை பேழை தான் நம் அன்னை மரியாள். தன் உதிரத்தில் தாங்கி வளரந்த நம் மீட்பரின் நற்கருணையின் பேழையான இறைவனின் உடன்படிக்கை பேழையான அன்னை மரியாள். அன்னை மரியாளின் உடலும், இரத்தமும் தான் இயேசுவின் சரீரமும் இரத்தமும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்ற பலிதான் திருப்பலி. இயேசுவின் இரத்தம் ஜெயம் என்பது உண்மை. அந்த மீட்பின் இரத்தம் மரியாளின் இரத்தம் என்பதை நாம் மறந்து போகக் கூடாது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தாவீதின் உடன்படிக்கை பேழையில் 10 கட்டளைகள், மன்னா, ஆரோனின் கோல் இந்த மூன்றும் வைக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் இஸ்ராயேல் மக்கள் போரில் வெற்றி பெறுவார்கள். அதே போன்று சமாதானம் செய்து கொள்வதற்காகவும் உடன்படிக்கை பேழையை கொண்டு சென்றார்கள். தங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறவேண்டும் என்றாலும் உடனடியாக மன்றாடுவார்கள், பெற்றுக்கொள்வார்கள்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் நம் இயேசு ஆண்டவரின் உடன்படிக்கை பேழைதான் அன்னை மரியாள். தேவதாய் இறை பிரசன்னத்தால் நிரம்பப்பட்டவள். ஆதலால் தான் தேவதாயைப் பார்த்தவுடன் லூக்.1:41 எலிசபெத் அம்மாள் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியாள் துள்ளிற்று. எலிசபெத் அம்மாள் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார் என்று வேதாகமத்தில் வாசிக்கின்றோம்.

பரிசுத்த ஆவியால் முழுவதும் நிரம்பப் பெற்ற நம் அன்னை திருக்கல்யாணத் தாயின் 101வது தேர்த்திருவிழா காலங்களில் பரிசுத்த ஆவியின் கொடைகள் திருக்கல்யாணத்தாய் வழியாக பெற்றுக் கொள்ள நாம் அன்னையிடம் வேண்டுவோம்.

– **Y.V. ராஜ்,** பொற்பை

# திருக்கல்யாணத் தாய் திருத்தல முதல்சனி வழிபாடு



## (7.12.2013)

திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் டிசம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 7.12.2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**சோஜோ** அடிகளார் குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை மலையாளத்திலும் அருட்திரு.**பீட்டர் பால்** அடிகளார் தமிழிலும் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. சப்பரப் பவனியின்போது மலையாளத்திலும், தமிழிலும் பாடல்கள் பாடப்பட்டது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு.**நெல்சன் பால்ராஜ்** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**பீட்டர்ராஜா,** அருட்திரு.**பிரிட்டோ,** அருட்திரு. **ஆரோக்கிய ராஜ்,** அருட்திரு. **கிராசியூஸ்**, அருட்திரு. **சந்திஸ்டர்** அருட்திரு.**கலைச்செல்வன்**, அருட்திரு. **ரெத்தினராஜ்,** திருத்தொண்டர்.**டேவிட் வளன்**,இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பீட்டர் பால்** அடிகளார் தமிழிலும்,அருட்திரு.**சோஜோ** அடிகளார் மலையாளத்திலும் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **300** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது. அதன்பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெபவழிபாடுகள் நடைபெற்றன. அதை திருத்தொண்டர். **டேவிட் வளன்** வழிநடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு.**பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதன்பின் சிறப்புமாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**

## நன்றிகள் பலகோடிகள்  முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| சாந்தி கார்த்தீசன்  வள்ளியூர் | 500.00 |
| S. ரெஜினாள் மேரி (பொற்பை) | 100.00 |
| D. ரோஸ் சேவியர் | 3000.00 |
| அந்தோணி பாஸ்கர் (பொற்பை) | 501.00 |
| ராஜபாண்டி  அடைக்கலாபுரம் | 100.00 |
| மந்திரம் நரையன்குடியிருப்பு | 3200.00 |
| ராஜ்,  பொற்பை | 200.00 |
| ராஜு செல்வன்  தூத்துக்குடி | 1001.00 |
| தீர்த்தூஸ்  ராமன்புதூர் | 750.00 |
| டோன்போஸ்கோ, பொற்பை | 100.00 |
| புபலதா | 500.00 |
| அந்தோணிதுரை | 1000.00 |
| தாசன்  மாடத்தட்டுவிளை | 5000.00 |
| டிக்சன் பெஜீலா  சுண்டன்விளை | 1000.00 |
| அந்தோணி துரை  பொற்பை | 1000.00 |
| சகாயராஜ்  புன்னக்காயல் | 1000.00 |
| சிலுவைமுத்து  பெங்களூர் | 500.00 |
| சூசைமரியான் பெற்றில்டா  குறும்பனை | 1000.00 |
| ஜேசுதாசன்  ராஜாவூர் | 1000.00 |
| ஜெரீன் ஸ்டோர் உடன்குடி | 500.00 |
| அந்தோணி ராஜ்  உடன்குடி | 500.00 |
| ஜெபஸ்டின் ரெனி  மதுரை | 500.00 |
| ஜெயராஜ்  பொற்பை | 500.00 |
| ஏசுவடியான் பொற்பை | 100.00 |
| மரியகாகு ராஜா வெள்ளக்கோவில் | 500.00 |
| ஜாண் வர்க்கீஸ் பெங்களூர் | 500.00 |
| சூசை, பொற்பை | 250.00 |
| குணசீலன்  ராஜாவூர் | 1000.00 |
| அந்தோணி ரிவெல்டர் குணசீலி  திசையன்விளை | 500.00 |
| மரிய பாண்டி அடைக்கலாபுரம் | 500.00 |
| ஜாண்பீட்டர்  பொற்பை | 500.00 |
| திவ்யா வினோத்  பொற்பை | 2000.00 |
| ராஜேந்திரன் பொற்பை | 100.00 |
| லூக்காஸ் மளிகை திருப்பூர் | 1000.00 |
| ஜெகன் ஜெஸிமா  கொம்புத்துறை | 300.00 |
| மரிய எட்வின் கட்டாரிமங்கலம் | 100.00 |
| சகாய பிரதாப் இராஜாக்கமங்கலம் | 3000.00 |
| குணசேகரன்  திருச்செந்தூர் | 100.00 |
| ஜாண் மோகன்  பைங்குளம் | 500.00 |
| அலெக்ஸ்  பொற்பை | 1000.00 |
| கென்னடி  தூத்துக்குடி | 100.00 |
| ஸ்டீபன்  ஏரல் | 500.00 |
| ராஜபெர்க்மான்ஸ்  புன்னக்காயல் | 500.00 |
| பதுவா டிராவல்ஸ்  மணப்பாடு | 700.00 |
| மொத்தம் | 37202.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. காமராஜ் – டெய்சி ராணி (சாப்பாடு பிளேட்) | 10,000.00 |
| அன்னையின் அடிமை பீடப்பூக்கள் | |
| ஹாசன் பஸ் காய்கறி ஏற்றிவந்தது (வாடகை) | நன்கொடையாக |
| டூத்லேஸ் முள்ளூர்துறை | அரிசி 25 கி |
| சேகர் வினோதா கூடுதாழை | அரிசி 100 கி |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 300 கி |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 100 கி |
| ஜஸ்டின் சென்னை | அரிசி 100 கி |
| ஜெரோம் குயிண்டின் கவரப்பேட்டை | அரிசி 100 கி |
| ஜோசப் செல்வராஜ் ஈரோடு | அரிசி 100 கி |
| ஜெயசீலன் ரூபி பொற்பை | அரிசி 100 கி |
| ராஜேஸ் அமலா பொற்பை | அரிசி 50 கி |
| ஜெரால்டு விஜி மும்பை | அரிசி 50 கி |
| சூசை மிக்கேல் கோவை | அரிசி 50 கி |
| ரூபி ஸ்டோர் பொற்பை | அரிசி 50 கி |
| சிசி நிஸா | அரிசி 50 கி |
| பிலிப்பு ராஜாக்கமங்கலம் | அரிசி 25 கி |
